# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

2023 ஓகத்து

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கட்டடவாக்கத் தொழிற்துறை 2023 ஓகத்தில் குறைவடைந்த மட்டத்தில் தொடர்ந்தும் செயலாற்றியது, இருந்தும் 47.0 கொண்ட மொத்த நடவடிக்கைச் சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து நடுநிலையான அடிப்படை அளவுமட்டத்தை நோக்கிச் சென்றது.** பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடுவதற்கமைய, உயர்வான போட்டிமிக்க விலைக்கோரல் விலைக்குறிப்பீடு சமர்ப்பித்தல் செயன்முறையில் மட்டுப்படுத்தப்பட்டளவில் கிடைக்கப்பெறுகின்ற கருத்திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனங்கள் சந்தை விலையை விடவும் விலைக்குறைப்பதற்கு முனைந்தன.

புதிய கட்டளைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு புதிய கருத்திட்டங்கள் கிடைக்கப்பெறாமை தொழிற்துறை மீது தொடர்ந்தும் கடுமையான பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கட்டுமானக் கருத்திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டளவில் கிடைக்கப்பெறுதல் தொழிற்துறையில் முக்கிய கரிசனையாக இன்னும் காணப்படுவதாக பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். இப்பின்னணியில் தொழில்நிலையில் தொடர்ச்சியான வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு தொழிற்பாடுகளைக் குறைப்பதற்கு ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களை நிறுவனங்கள் பதவிவிலக்கின. மேலும், மாதகாலப்பகுதியில் மெதுவான வீதத்திலேனும் கொள்வனவுகளின் அளவு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளையில், நிரம்பலர் இயலளவு மீது குறைவடைந்த அழுத்தத்தின் பிரதான காரணமாக மாதகாலப்பகுதியில் நிரம்பலர்களின் விநியோக நேரம் குறுக்கமடைந்தது.

| மாறி | யூலை. | ஓகத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **மொத்த நடவடிக்கை** | **43.2** | **47.0** | + | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 45.9 | 41.2 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 29.7 | 26.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 39.2 | 44.1 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 50.0 | 47.0 | - | நடுநிலையிலிருந்து குறுக்கமடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் மீட்சியின் பிரதான காரணமாக செத்தெம்பர் தொடக்கம் கருத்திட்டங்கள் கிடைக்கப்பெறுவதில் மேம்பாடொன்றினை அவை அவதானிக்கின்றமையினால் அடுத்துவரும் மூன்று மாதங்களை நோக்கிய நிறுவனங்களுக்கிடையிலான எண்ணப்பாங்கு சாதகமாக காணப்பட்டது.

**மொத்த நடவடிக்கைச் சுட்டெண் அளவு**
**2023 ஓகத்து**
**47.0**

கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *தொகுத்தல்: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்*[1]

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கும்.

கொ.மு.சு =50; துறையானது நடுநிலையில் காணப்படுகிறது

கொ.மு.சு >50; துறையானது பொதுவாக விரிவடைகிறது

கொ.மு.சு <50; துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது

### *மாறிகள் பற்றிய வரைவிலக்கணங்கள்:*

மொத்த நடவடிக்கை: கட்டடவாக்க நடவடிக்கையின் மொத்த அளவு, பன்னாட்டு நடத்தையினைப் பின்பற்றி 'கட்டடவாக்க கொ.மு.சு' ஆக குறிப்பீடு செய்யப்படும் முதன்மைச் சுட்டெண் இதுவாகும். இது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் தொழில்நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

தொழில்நிலை: நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை

கொள்வனவுகளின் அளவு: உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்

நிரம்பலர் விநியோக நேரம்: கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு

ஏனைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.

### *அளவீட்டு பதிலிறுத்தல்கள்*

மாதத்திற்கு மாதம் அபிவிருத்திகளை எடுத்துக்காட்டுவதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுத்தல்களை உள்ளடக்கி கட்டடவாக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட உயர்தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்க கம்பனிகளை இலக்காகக் கொண்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது.

[1] உலகளாவிய தொகுப்பாளராக இனங்காணப்பட்டு உலகளவில் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சுட்டெண்களை தொகுக்கின்ற எஸ்அன்ட் பி குளோபல் நிறுவனத்தால் பின்பற்றப்படும் முறையியல் பயன்படுத்தி கொ.மு.சு தொகுக்கப்படுகின்றது.